# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தியாவிலேயே பன்முகத்தன்மையோடு தொழில் துறைக்கு சாதகமான எல்லா அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

நம்முடைய மாநிலத்தில் 39 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கிறது. இதனால், உற்பத்தியும் அதிகம் செய்யப்படுகிறது. வேலைவாய்ப்பும் அதிகம் உருவாக்கப்படுகிறது.

**பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் முன்னோடித் திட்டங்கள்!**

இன்றைய தினம், சிப்காட் நிறுவனம் தொழில்நுட்ப ரீதியாக ஃபாக்ஸ்கான் நிறுவனத்தோடு இணைந்து

## பரவலான வளர்ச்சியே பார் போற்றும் வளர்ச்சி! சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி!

திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் வடகால் கிராமத்தில் அமைத்திருக்கும் 'தொழிற்சாலைப் பணியாளர்களுக்கான தங்குமிட வசதி'யை திறந்து வைத்திருக்கிறேன். 706 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இது அமைந்திருக்கிறது. 18 ஆயிரத்து 720 படுக்கைகள் கொண்டதாக இது இருக்கிறது. பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் முன்னோடித் திட்டம் இந்த திட்டம்.

தொழில் வளர்ச்சி மூல மாகத்தான் வேலைவாய்ப்பு பெருகும், பொருளாதாரமும் விரைவான வளர்ச்சி பெறும்! அதனால்தான் தொழில் வளர்ச்சியில் நாங்கள் தனிக் கவனம் செலுத்தி வருகிறோம்.

2021ல் நம்முடைய அரசு பொறுப்பேற்றது முதல், தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களை தொடங்கி செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், சிப்காட் மூலமாக,

காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் மருத்துவ உபகரணங்கள் பூங்கா,

பிள்ளைப்பாக்கத்தில் மின்னணு தயாரிப்பு தொகுப்பு,

இராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கத்தில் மெகா காலணி உற்பத்தி பூங்கா,

மணப்பாறை, திண்டிவனம் மற்றும் தேனி ஆகிய இடங்களில் மாபெரும் உணவுப் பூங்காக்கள்,

தூத்துக்குடியில் சர்வதேச அறைக்கலன் பூங்கா,

விருதுநகரில் பிரதமரின் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடைப் பூங்கா,

திருப்பெரும்புதூர் மற்றும் ஓசூரில் 2 சிப்காட் தொழில் புத்தாக்க மையங்கள்,

பெரம்பலூர் மாவட்டம், எறையூரில் புதிய காலணி உற்பத்தி தொழிற் பூங்கா ஆகிய சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

'பரவலான வளர்ச்சியே பார் போற்றும் வளர்ச்சி, சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி' என்பதை உறுதி செய்யும் வகையில், நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டில் தொழிற் பூங்காக்கள் இல்லாத மாவட்டங்களில், புதிதாக தொழிற் பூங்காக்கள் அமைக்க முடி வெடுத்தோம்.

**சுமார் 12 ஆயிரத்து 500 ஏக்கர் சிப்காட் நிலவங்கியில் சேர்ப்பு!**

அதேபோல், 45 ஆயிரம் ஏக்கர் நில வங்கி உருவாக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்திருந்தேன்.

இப்போது வரைக்கும், 41 ஆயிரம் ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டிருக்கிறது. அதனுடைய, சுமார் 12 ஆயிரத்து 500 ஏக்கர் நிலங்கள் சிப்காட் நிலவங்கியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சிப்காட் நிறுவனம் மூலம் இருங்காட்டுகோட்டை, திருப்பெரும்புதூர் மற்றும் திருப்பூர் மாவட்டம், நெருப்பெரிச்சல் ஆகிய இடங்களில் மூன்று தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருக்கிறது.

இந்த வசதிகளை நன்றாக பயன்படுத்திக் கொள்வதோடு, உங்கள் சொந்த குடியிருப்புகளை எவ்வளவு கவனமாக பராமரிப்பீர்களோ, அதே அளவுக்கு இந்த விடுதிகளையும் சிறப்பாக பராமரிக்க முழு ஒத்துழைப்பையும் நீங்கள் வழங்க வேண்டும் என்று தொழிலாளத் தோழர்களை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

2030ஆம் ஆண்டுக்குள், ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு வளர்ச்சி அடைய வேண்டும் என்று நான் ஒரு லட்சிய இலக்கை நிர்ணயித்திருக்கிறேன்.

**பத்ம பூஷன் விருதுபெற்றுள்ள ஃபாக்ஸ்கான் தலைவருக்கு பாராட்டு!**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சிறப்பான செயல்பாடுகள், அந்த இலக்கை நாம் விரைவாக எட்டுவோம் என்று நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது. அதற்கு ஃபாக்ஸ்கான் போன்ற நிறுவனங்கள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, மீண்டும் 'பத்ம பூஷன்' விருது பெற்றுள்ள ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைவர் யாங் லீயு அவர்களை மனதார பாராட்டுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




### உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி முன்னிலை!

# சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நான் முதல்வன் திட்ட கருத்தரங்கம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, ஆக.18-**

**சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் (16.08.2024) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட கல்வி நிறுவன தலைவர்களுடனான மாநில அளவிலான கருத்தரங்கத்தை இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு தேவையான பல ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கினார். உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி இக்கருத்தரங்கத்திற்கு முன்னிலை வகித்தார்.**

இத்திட்டத்தின் துவக்கம் மற்றும் வெற்றிகரமான செயல்பாடு குறித்து இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறுகையில், தேசிய அளவில் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் உயர்கல்வியில் தமிழ்நாடு அரசு புகுத்தியுள்ள புதுமையான திட்டங்கள் நாட்டில் திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் முன்னுதாரணமாக திகழ்கின்றன.

கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் தமிழ்நாடு மாபெரும் சாதனைகளைப் படைத்து வருகிறது. தொடக்கக் கல்வியில் தொடங்கி - உயர்கல்வி வரையிலும், காலை சிற்றுண்டித் திட்டம் - புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் மாதிரியான திட்டங்கள் நம் மாணவர்களின் கல்விக்கு துணை நின்று வருகின்றன. புதுமைப்பெண் திட்டம் வந்த பிறகு கல்லூரியில் மாணவிகளின் சேர்க்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது.

**மாணவர் சேர்க்கை அதிகரிப்பு!**

ஒட்டுமொத்த உயர்கல்வி சேர்க்கை விகிதத்தில் (Gross Enrollment Ratio) தமிழகம் முன்னிலை வகிக்கிறது. GER ஐ பொறுத்தவரை ஒட்டுமொத்த இந்திய நாடும் 50 சதவீதத்தை தாண்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கும் போது GERல் 100 சதவீதத்தை எட்டுவதற்கான முயற்சிகளை தமிழ்நாடு அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது. தேசிய உயர்கல்வி தரவரிசைப் பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த நிறுவனங்கள் அதிக அளவில் இடம்பிடித்துள்ளது.

குறிப்பாக அண்ணா பல்கலைக்கழகம் நம் நாட்டில் உள்ள தலைசிறந்த கல்வி நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. நான் முதல்வன் திட்டம் எண்ணற்ற சாதனைகளைப் படைத்து வருகின்றது. முதலமைச்சரின் கனவுத் திட்டம் மட்டும் அல்ல இலட்சக்கணக்கான இளைஞர்களின் கனவை நிறைவேற்றும் திட்டமாக உயர்ந்து நிற்கிறது.

இத்திட்டத்தில் இதுவரை 31 இலட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்று உள்ளார்கள் என்றும், நான் முதல்வன் வேலைவாய்ப்பு முகாம்களின் மூலம் ஒரு இலட்சம் மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். நான் முதல்வன் திட்டம் எந்தத்திசையில் சென்று கொண்டிருக்கிறது.

**அதிக அளவில் வெற்றிகளை குவிக்க முடியும்!**

இனி எந்தத் திசையில் சென்றால் இன்னும் அதிகமான வெற்றிகளை குவிக்க முடியும் என்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதே இந்தக் கருத்தரங்கம் நடைபெறுவதன் நோக்கம். வளாக வேலைவாய்ப்பில் கல்லூரிகளை நாடி வருவதற்கு இரண்டு அம்சங்கள் முக்கியமானவை.

திறன்மிக்க மாணவர்கள் இருக்க வேண்டும். இதற்காகத்தான் நான் முதல்வன் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கினார்கள். Skill Lab, Skill Based syllabus coaching, College Ranking போன்ற தரவரிசையில் கல்லூரிகள் முன்னிலை வகிப்பதும் முக்கியம். நான்முதல்வன் திட்டத்தில் வழங்கபடும் திறன் பயிற்சி ஒரு கூட்டு முயற்சி என்பதும் மாணவர்கள், கல்லூரிகள், பேராசிரியர்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

எனவே, நான் முதல்வன் எடுக்கும் அனைத்து முன்னெடுப்புகளிலும் கல்லூரிகள் பங்குபெற்று இத்திட்டத்தினை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கத்தில் பகிரப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இன்னும் இலட்சக்கணக்கான இளைஞர்கள் திறன் பெறுவதற்கு இத்திட்டத்தை மேலும் செழுமைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும், இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்ட உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கல்லூரி நிர்வாகிகளுக்கு நான் முதல்வன் திட்டம் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கினார். உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை மட்டுமல்லாது வழங்கப்படும் கல்வித் தரத்திலும் தமிழ்நாடு முன்னிலை வகிப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நான் முதல்வன் திட்டத்தினை தமிழ்நாட்டிற்கு அர்ப்பணித்துள்ளார் என்று கூறினார்.

மேலும், இக்கருத்தரங்கத்தில் உரையாற்றிய உயர்கல்வித்துறை செயலர் நான் முதல்வன் திட்டம் வேலைவாய்ப்பு பெறுவதற்கான சவால்களுக்கு தீர்வாக அமைந்துள்ளது என்றும் கல்லூரி நிர்வாகங்கள் இத்திட்டத்தின் நோக்கத்தினை புரிந்து கொண்டு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

சென்னை மண்டலத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளின் தலைமை நிர்வாகிகள் (தலைவர் / செயலாளர், முதல்வர்கள் மற்றும் SPOCகள்) அனைவரும் இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்டனர். இந்த கருத்தரங்கத்தில் நான் முதல்வன் திட்டம், அதன் நோக்கங்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் குறித்த முழுமையான விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில், அண்ணா பல்கலைக்கழகத்தின் 7 மண்டலங்களில் இருந்து 135 பொறியியல் கல்லூரிகளும், சென்னை மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகங்களில் இருந்து 230 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் பங்கேற்றன.

மேலும், இக்கூட்டத்தில் சிறப்பாக செயல்புரிந்த கல்லூரிகளுக்கு இரண்டு வகையான விருதுகள் வழங்கப்பட்டன.

1. மாணவர்களுக்கு அதிகளவு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த கல்லூரிகள்

2. இத்திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை சிறந்த முறையில் நல்கும் கல்லூரிகளின் முகவர்கள் (SPOC)

இக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் பிரதீப் யாதவ், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் டாக்டர். டாரேஸ் அகமது, தொழில்நுட்ப கல்வி இயக்கக ஆணையர் டி.ஆபிரகாம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஜெ.இன்னசென்ட் திவ்யா, கல்லூரிக் கல்வி இயக்குநர் செ.கார்மேகம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழக உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் நடத்தி வைக்கிறார்! மு.மகேஷ்குமார் தலைமை!

# சைதை 169 'அ' வட்டச் செயலாளர் சைதை மு.இராஜா இல்ல மணவிழா!

### இரா.துரைராஜ். எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை! எம்.பி. – எம்.எல்.ஏ.க்கள் வாழ்த்துகின்றனர்!

*சென்னை, ஆக. 18 -*

*சைதை கிழக்கு பகுதி 169 'அ' வட்டக் கழக செயலாளர் சைதை மு.இராஜா - பவானி ஆகியோரின் இளைய மகன் இரா.எழிலன் , ஒய்.மோசஸ் - விஜயம்மா ஆகியோரின் புதல்வி எம்.நயோமி ஆகியோரது மணவிழா இன்று (18.8.2024 -ஞாயிறு மாலை 6.30 மணிக்கு சைதை ராஜ் தியேட்டர் அருகில் உள்ள எ.கே.பி. மகாலில் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்ட செயலாளருமான மா.சுப்பிரமணியன் நடத்தி வைக்கிறார்.*

*இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் - துணை மேயர் மு.மகேஷ்குமார் தலைமை தாங்கிட, பகுதிச் செயலாளர்கள் இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி , மாவட்ட அவைத் தலைவர் சைதை எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதர்ன், மின்னல் கந்தப்பன், வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் அ.ம.துரை வீரமணி, 169வது வட்ட செயலாளர் எல். ஆரோக்கியராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*மு.பாக்கியலட்சுமி, என்.நந்தகோபால் சைதை எஸ்.ராதாகிருஷ்ணன், சைதை ஏ.மஜித், வே.கோதண்டம், டி.கண்ணன், சைதை ஆ.வரதன், சொ.முருகையன், மு.சாந்தி, கேபிள் சம்பத், கே.பி.மகேஷ், எம்.பாபு, பா.செல்லபாண்டியன். எஸ்.ஏ.ரியாஸ் அகமது ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., பா.தாயகம் கவி எம்.எல்.ஏ., விஜய்வசந்த் எம்.கி. (காங்), சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த் ரமேஷ், காரப்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., ஏ.எம்.வி. பிரபாகரராஜா, ஜெ.கருணா நிதி எம்.எல்.ஏ., மாமன்ற உறுப்பனர்கள் க.தனசேகரன் , பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன் , பாலவாக்கம் த. விஸ்வநாதன் மற்றும் பாலவாக்கம் மு.மனோகரன், திருமதி. வாசுகி பாண்டியன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., ராஜா அன்பழகன் எம்.சி., , சைதை ஜேக்கப் (வி.சி.க.)*

*பகுதி, ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கண்ணன், மு.ராசா, வேளச்சேரி சு.சேகர், துரைகபிலன், பெருங்குடி எஸ். வி.ரவிச்சந்திரன், வி.ஜி.மதியழகன், நொளம்பூர் வே.ராஜன், கோவில்பாக்கம் ஜி.வெங்கடேசன், தி.நகர் ஏழுமலை, தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் மேடவாக்கம் பா.ரவி, எம்.கே. ஏழுமலை, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், அ.அரிகிருஷ்ணன், ஆர்.பாலசுந்தரம், வீர. கனிமொழி, பி.எஸ்.முருகேசன், அடையார் பி.ஜெ. பாஸ்கர், தா.பஷுர், மாமன்ற உறுப்பினர்கள் தா. மோகன்குமார், வேளச்சேரி வே.ஆனந்தம், ரத்னா லோகேஷ்வரன், நிலவரசி துரைராஜ், ஹேமலதா கணபதி, பா.ஏகாம்பரம்,*

*தமிழரசி சோமு, ம.தி.மு.க சுப்பிரமணியன் எம்.சி., அன்பு தனசேகரன், தவசிகுமரன், சைதை கிழக்கு,மேற்கு பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார் மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, களக்காடி எல்லப்பன், த.சம்பத், சைதை ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன், கவிதா கௌதம், சி.பி. இறைவன், சைதை கிழக்கு, மேற்கு வட்ட செயலாளர்கள் நா.ராதா கிருஷ்ணன், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேரு நகர் எஸ்.பாட்சா, எஸ்.ஆர். செந்தில் சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோ கமலநாதன், எஸ். பி.கோதண்டம், எம்.நாகா, அண்ணன் ஏழுமலை, தி.நகர் பி.மாரி, கோ.உதயசூரியன், ஜெ. ஜானகிராமன், ஏ.கே. ஆனந்த்*

*சைதை சாதிக், அஞ்சல் ராமன், கோ.பாஸ்கர், எம்.எஸ். அரிபாபு, நா.மணிகண்டன் எம்.எஸ்.சசிகுமார், சி.பரிமேலழகர், கழக த.ரமேஷ், தரமணி ஜெகதீசன், நிஷாசையத், பா.அருண்குமார், த.பாபு, ஆர். கிருஷ்ணகுமார், எஸ்.பிரகாஷ், ராஜா சம்பத், வி.தாமோதரன், பா.பரத்குமார், மே. குணா, பா.அருண், கோட்டூர் கோ. ராஜன், க.தீபன், இரா.சத்யா, கனிமொழி தனசேகரன், ஏ.டி. சதீஷ்கண்ணன், எம்.விநாயகமூர்த்தி உள்ளிட்ட அணிகளின் நிர்வாகிகள் மற்றும் 169 வது அ வட்டக் கழக நிர்வாகிகள் வாழ்த்துகின்றனர்.*






முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, இராயபுரம் தொகுதி ஸ்ரீ கௌதம்சந்த் கோத்தரி மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழாவில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, நேரில் பங்கேற்று, மாணவ மாணவியர்கள் மத்தியில் சிறப்புரையாற்றி, அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளி தாளாளர், ஆசிரியப் பெருக்கள், மாணவ மாணவிகள் மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### விருத்தாசலம் எம். செல்வராஜ்
### ஆகஸ்ட் 18 (1997)



**தந்தை பெரியார் தலைமையில் 1944ஆம் ஆண்டு திராவிடர் கழகத்தில் சேர்ந்தார். பின்னர், அண்ணா தலைமையில் தி.மு.க. தொடங்கிய காலம் முதல் தொடர்ந்து தொய்வில்லாமல் கழகப் பணியாற்றியவர்.**

**தென்னாற்காடு மாவட்டத்தில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவர். மாவட்டக் கழகச் செயலாளர், கழக அமைப்புச் செயலாளர், மூன்று முறை தணிக்கைக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர். தமிழக சட்டப்பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.**

**மக்கள் பிரச்சினைக்காக கழகம் நடத்திய பெரும்பாலான போராட்டங்களில் பங்கேற்றவர். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.**

**கழகச் சார்பில் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் 'பெரியார் விருது' வழங்கி சிறப்பித்தார்கள்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னை கிழக்கு மாவட்டக் கழக அயலக அணியின் ஆலோசனைக் கூட்டம் புரசைவாக்கத்தில் உள்ள டவுட்டன் கபே ஓட்டலில் மாவட்ட கழக செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஆலோசனையின்படி சிறப்பாக நடைபெற்றது. இக் கூட்டத்தில் அயலக அணி மாவட்ட அமைப்பாளர் ஆர்.எஸ்.சித்திக் தலைமையேற்று ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட மாவட்ட துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.